# பெனெஸ்டா, தனது சில்லறை வணிக செயல்பாடுகளை திருநெல்வேலியில் விரிவுபடுத்தி உள்ளது

நெல்லை, ஏப். 6

இந்தியாவின் மிகப்பெரிய ஜன்னல் மற்றும் கதவுகள் பிராண்டும், இத்துறையில் சந்தையில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றுமான பெனெஸ்டா, தென் தமிழ்நாட்டில் மற்றொரு புதிய ஷோரூமை திருநெல்வேலியில் திறந்து வைத்ததன் மூலம் தங்களின் சில்லறை வணிகத்தை விரிவுபடுத்தி உள்ளது. கிரீனஸ்ட் பில்டிங் சிஸ்டம்ஸ் என்ற இந்த பிரத்யேகமான ஷோரூம், எண்.16, திருமால் புரம், என்எச்-7, டக்கர் அம்மாள்புரம், திருநெல்வேலி என்ற விலாசத்தில் அமைந்துள்ளது. கண்ணாடி மற்றும் யுபிவிசியால் தயாரிக்கப்பட்ட மிகச்சிறந்த ஜன்னல்கள் மற்றும் கதவுகள் இங்கு கிடைக்கும்.

இந்த புதிய ஷோரூமின் துவக்கத்தைப் பற்றி கூறும் பெனெஸ்டா நிறுவனத்தின் வர்த்தகத் தலைவரான சாகெத் ஜெயின், "எங்கள் பிராண்டின் நீண்டகால மரபை நினைத்து நாங்கள் மிகவும் பெருமிதம் கொள்கிறோம். வாடிக்கையாளர்களுக்கு எங்கள் திறமைக்கு ஏற்ற சேவையைச் செய்ய நாங்கள் தொடர்ந்து முயல்வோம். எங்கள் தயாரிப்புகளின் தரம், மிகச்சிறந்த சேவை, பிராண்டின் நிபுணத்துவம் ஆகியவற்றைப் பற்றிய நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்த ஷோரூம்களை ஒரு முக்கிய வழியாக நாங்கள் கருதுகிறோம். எனவே புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் அதே நேரத்தில், எங்களின் ஷோரூம்களின் எண்ணிக்கையையும் அதிகரித்து வருகிறோம். கதவுகள் மற்றும் ஜன்னல்களில் ஏராளமான வடிவங்கள் மற்றும் பாணிகளைக் கொண்ட எங்களின் மாறுபட்ட தொகுப்பு, வாடிக்கையாளர்கள் தேர்வு செய்வதற்கு பல்வேறு வகைகளைக் கொடுக்கிறது. அனைத்து வகையான வாடிக்கையாளர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்து, எங்களின் இருப்பை வலுவாக நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதே பெனெஸ்டாவின் தந்திரமாகும்" என்றார்.

இந்த புதிய ஷோரூமை துவக்கி வைத்ததுடன், வாடிக்கையாளர்களுக்கான ஊடாடத்தக்க மற்றும் தகவல்சார்ந்த கொள்முதல் அனுபவத்தை உறுதிப்படுத்துவதில் புதிய மைல்கல்லை பெனெஸ்டா எட்டியுள்ளது.

சந்தையில் முக்கியமான வாடிக்கையாளரை அணுகுவது, தயாரிப்புகளை சந்தைப்படுத்துவது மற்றும் அதன்மூலம் சந்தையில் முன்னணி இடத்தைப் பெறுவது ஆகியவற்றில் பெனெஸ்டாவின் ஷோரூம்கள் முக்கிய பங்கை அளித்துள்ளன. இந்தியாவில் யுபிவிசி ஜன்னல்கள் மற்றும் கதவுகள் தொழிலில் அதிவேகமான வளர்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில், இந்த பிராண்டானது எதிர்காலத்தில் தனது சந்தைப் பங்கை அதிகரித்து இத்துறையில் தனது முன்னிலையை தக்கவைப்பதற்கு பெருமுயற்சி எடுத்து வருகிறது, என்றும் அவர் கூறினார்.